RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1124

# பன்முகப் பார்வையில் பாரதியின் படைப்புகள்

ப. பாரதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சாரதா கங்காதரன் கல்லூரி, வேல்ராம்பட்டு-605010, புதுச்சேரி, இந்தியா

# Bharathi's Works in Multifaceted Perspectives

P. Barathi [a, *]

[a] Department of Tamil, Saradha Gangadharan College, Velrampet-605010, Puducherry, India

* Corresponding Author: barathilang@sgcpdy.com

Received: 14-08-2021
Revised: 28-07-2022
Accepted: 03-08-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathiyar has carved out a unique personality for himself in the Tamil creative world. His literary platforms have expanded in various forms, such as poems, stories, essays, magazines, and translations. Bharathi's works basically reflect on three levels: language, nationality, and women. His works demonstrate how these three levels are intertwined and constructed. It also proposes key concepts of powerless politics, social order, and women's reform. Language is the primary identity of a society. Bharthi's work shows that he was actively involved in promoting the excellence of the Tamil language throughout the world. Bharathi's national work also focused on economic liberation, caste liberation, slavery liberation, etc. Bharathiyar is one of the foremost reformers who voiced support for women's education. Bharathi's work and contributions are the main reasons for women's freedom in education, career, and family development today. Bharathi's multifaceted works serve as a great guide for today's Tamil creators.

**Keywords:** Bharathiyar, Women Freedom, Education, Liberation

## முன்னுரை

தமிழ் படைப்புலகில் தனக்கென்று தனி ஆளுமை பதிவு செய்தவர் பாரதியார். தாம் வாழ்ந்த இடத்தை நன்கு அறிந்துகொண்டு சமூகத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் புரட்சிகரமான எண்ணங்களை வெளியிட்ட மிக சிறந்த படைப்பாளர் பாரதியார். இவரின் சிந்தனைகள் காலம் குறித்த பேசுவதோடு காலத்தை வென்று இன்றும் நாளையும் நம்மை சிந்திக்கத் தூண்டுவதாக அமைகின்றது. தமிழ் கவிதையிலும், கட்டுரைகளிலும் சிறப்பான புலனம் கொண்டு நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தார். மூட சமூகத்தின் திறவு கோலாகவும், புரட்சிக்கவியாகும், விடுதலை கவியாகவும், வாழ்ந்தவர். மொழி, இனம், நாடு, பெண்கள் குறித்து அதிக கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவ்வெழுத்தின் மூலம் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஊட்டிய அவனின் படைப்புகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாரதி ஓர் அறிமுகம்

1882 ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி எட்டையபரத்தில் சின்னசாமி, இலக்குமியம்மாளுக்கு மகனாக பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியம். ஐந்து வயதிலே தன் தாயை இழந்த பாரதியார் தமிழைத் தாயாக ஏற்று ஏழு வயதில் கவிதை எழுத தொடங்கினார். இளமையிலேயே அருட்கவி புரியும் ஆற்றலை வியந்த எட்டயபுர மன்னர் சுப்பிரமணியருக்கு சரஸ்வதி எனும்

பொருள்படும்படி பாரதி என்று பெயர் வைத்தார் அன்றுமுதல் சுப்ரமணிய பாரதியார் என்ற பெயரே நிலைத்துவிட்டது. இப்பெயர் மட்டுமின்றி மகாகவி, ஷெல்லிதாசன், சக்திதாசன், புதுமைக் கவிஞன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால இயக்கத்தின் விடிவெள்ளி, விடுதலைக்கவி, மீசை கவிஞன், முண்டாசு கவிஞர் போன்ற பல்வேறு சிறப்பு பெயர்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

1897 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் நாள் 7 வயதே நிரம்பிய செல்லம்மாளை 14 வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். 1905ஆம் ஆண்டு எழுத்தாளரான பாரதிக்கு அரசியல் மீது ஆர்வம் ஏற்பட்டு பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டார். அப்போது வ.உ. சிதம்பரம் பிள்ளையின் நட்பும், விவேகானந்தரின் நட்பும், பாலகங்காதர திலகரின் நட்பும் கிடைத்தது. அச்சமயம் விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதா தேவியைச் சந்தித்து அவரைத் தனது ஞான குருவாகவும், பாலகங்காதர திலகரை அரசியல் உருவாகும் ஏற்றோர். 1907 ஆம் ஆண்டு இந்தியா என்னும் வார ஏட்டையும், பாலபாரதம் என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் அனல் தெறிக்கும் விடுதலைப்போர் கவிதைகள் மூலமாக மக்கள் மனதில் பதிந்தவர். விடுதலை உணர்வை ஊட்டும் கவிஞனாக மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளராகவும், பத்திரிக்கையாளராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலைத்து நின்று வாழும் கவிஞராக விளங்கினார். விடுதலைப் போராட்டப் பாடல்களை எழுதியதால் கைது செய்யப்பட்டு பின் விடுதலையானார். 1907 ஆம் ஆண்டு சர்வதேச கீதங்கள் என்ற தனது முதல் நூலை எழுதினார். 1921 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் யானைத் தாக்கி நோய் வாய்ப்பட்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி தன் இன்னுயிரை நீத்தார்.

“தோன்றின் புகழோடு தோன்றுக அஃதில்லார் தோன்றலின் தோன்றாமை நன்று” (திருக்குறள்) என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்றவாறு பிறந்து இன்றும் நம் அனைவரின் மனதிலும் புகழோடு வாழ்ந்துக் கொண்டிருப்பவர் பாரதியார் என்றே கூற வேண்டும்.

## பாரதியின் தமிழுணர்வு

மொழி என்பது ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டும் அன்று. அது பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, பழக்கவழக்கம், பண்பாடு போன்றவற்றைப் பிரதிபலிக்கின்றன.

எந்த ஒரு மொழி மாற்றத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்கிறதோ அந்த மொழி இறந்த மொழி (Dead language) எனப்படும். மாறாக காலத்திற்கு ஏற்றார் போல் எந்த மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறதோ அந்த மொழியே வாழும் மொழி (Living language) என்று கருதப்படுகின்றது.

அவ்வகையில் தமிழ் மொழி தன்னைப் புதுப்பித்துக் கொண்டு மற்ற மொழிகளுக்கு இணையாக இந்திய நாட்டில் செம்மொழிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்திய அரசால் அதிகாரப்பூர்வமாக 2004 ஆம் ஆண்டு தமிழ் மொழி செம்மொழிக்கான அந்தஸ்தைப் பெற்றது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழ்மொழி அரசாங்க அலுவலக மொழியாக விளங்குகின்றது. இத்தகைய தமிழ் மொழியின் உயர்வையும், சிறப்பையும் பாரதியார் தனது கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழியின் சிறப்பு தமிழோடு நில்லாமல் உலகமெல்லாம் பரவ வேண்டும் என்பதில் தீவிர செயல்பாடு கொண்டவராக பாரதியார் விளங்கினார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம், இத்தாலி போன்ற பல மொழிகளை அறிந்த பாரதியார் அம்மொழிகளுள் தமிழ் மொழியே சிறப்பானது என்பதை தனது கவிதையில் குறிப்பிடும் போது,

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்; என்கிறார் (Bharathiyar, 2007). இதுமட்டுமின்றி அம்மொழி அழியாமல் காக்கப்பட வேண்டிய வழிமுறைகளையும் குறிப்பிடும் போது,

‘இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்’

என்கிறார் (Bharathiyar, 2007). மொழி அழியாமல் இருக்க வேண்டும் என்றால் அம்மொழியில் புதிய புதிய நூல்கள் உருவாக்கல், பிற நாட்டில் உள்ள சிறந்த நூல்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல், உலகமெல்லாம் தமிழோசை பரவச் செய்தல், கலைச்சொற்களை உருவாக்கல் போன்றவற்றைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான செயல்களாக பட்டியலிடுங்கின்றர். இவ்வாறு செய்தால் தமிழ் மொழி உலகம் முழுவதும் பரவி சிறப்படையும் என்பதை தம் கட்டுரையில் குறிப்பிடும் போது,

'தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்' என்கிறார் (Jayakanthan, Balasubramaniyam, 2009). உலகம் முழுவதும் தமிழ் மொழி பரவவில்லை என்றால் தன் பெயரை மாற்றிக் கொள்கிறேன் என்று கூறாமல் என் பெயரை மாற்றி அழையுங்கள் என்று துணிவுடன் கூறியவர் பாரதியார். அன்று அவர் கண்ட கனவு இன்று நிறைவேறியுள்ளது என்றே கூற வேண்டும். சொல்லிலேயே உயர்ந்த சொல் தமிழ்ச் சொல் தான் என்பதை குழந்தைப் பருவத்திலிருந்தே நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பாப்பாக்களுக்கு அறிவுறுத்துவது போல் பாடியுள்ளார் பாரதியார்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா"

என்கின்றார் பாரதியார் (Bharathiyar, 2007). பிற மொழிகளுக்கு முன்னுரிமை தந்தால் தமிழ்மொழி எதிர்காலத்தில் அடையும் நிலையையும் தம் கவிதையில் பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

'மெல்லத் தமிழினிச் சாகும் -அந்த

மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்'

என தமிழ் மொழியின் நிலைமையைச் சமூகத்திற்கு உணர்த்தி அதனைச் சீர் செய்யும் வழிகளையும் கூறியுள்ளார் (Bharathiyar, 2007). மொழியை ஒரு இனத்தின் அடையாளமாக காண்பதால் தான் தமிழ் மொழி குறித்த கவிதைகளை அதிகமாக பாடியுள்ளார். ஒரு மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்து விடும் என்பதை உணர்ந்த பாரதியார் தமிழ் மொழியின் சிறப்புகளைச் சுட்டியும், அம்மொழி காக்கப்பட வேண்டிய அவசியத்தையும் தனது கவிதைகளில் எடுத்துரைத்துள்ளார்.

## பாரதியின் தமிழின உணர்வு

தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இலக்கண இலக்கிய வளமை மிக்க திராவிட மொழியாம் தமிழை தாய்மொழியாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். உலகம் முழுவதிலும் இன்று தமிழர்கள் பரவி வாழ்ந்தாலும் அவர்களின் தாயகம் தமிழ்நாடும், தமிழ் ஈழமும் ஆகும். 1800 ஆம் ஆண்டு முதல் 1900 ஆம் ஆண்டு வரை பிரித்தானிய குடியேற்றவாத அரசால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்வதற்காக தென்னிந்தியாவில் இருந்தும் இலங்கையின் வட பகுதியில் இருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் குடியேற்றப்பட்டார்கள் (Rathinam, 1978).

இருபதாம் நூற்றாண்டில் தொழில் வாய்ப்புகள் பெற்று ஆசிய நாடுகளுக்கு சென்று வசித்தனர். 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்கள் தொழில் வல்லுனர்களாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர் 1883 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டு இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட பெருமளவான ஈழத்தமிழர்கள் தங்கள் நாட்டைவிட்டு ஆஸ்திரேலியா, கனடா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழ தலைப்பட்டனர் உலகில் 700 மில்லியன் தமிழ் மக்கள் தமிழை தாய்மொழியாகவும் மேலும் 9 மில்லியன் மக்கள் தமிழை இரண்டாம் மொழியாகவும் ஏற்று வாழ்கின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்ந்தாலும் தமிழ் மொழிய வளர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளாமல் இருக்கின்றனர் என்று பாரதியார் தமிழர்களை சாடியும், மேலும் தமிழ்மொழி மேன்மை பெறுவதற்கான வழிவகைகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்'.

என்று பாடியுள்ளார் (Bharathiyar, 2007). தமிழர்கள் கல்வி அறிவு பெற்று பல நாடுகளில் பரவி வாழ்ந்தாலும் தமிழ் மொழியை வளர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளாமல் இருப்பதனால் விலங்குகளுக்கும், படிக்காதவர்களுக்கும் நிகராக ஒப்பிடுகின்றார். அதுமட்டுமின்றி பெயரளவில் மட்டுமே தமிழராக வாழ்கின்றனர் என்றும் சாடியுள்ளார் (Kandhaiyaa, 1983). இதுமட்டுமின்றி மேற்கு திசை வாழ் மக்களின் நாகரீகம் பண்பாட்டில் நம் மக்கள் முழுகியுள்ளதால் தமிழ் மொழி உலகாளும் மொழியாக மாறாது என்பதையும் தனது கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார் (Datchinamoorthy, 1994).

"முழுவதுமே தழுவி முழ்கிடி னல்லால்,

தமிழ்ச் சாதி தரணி மீதிராது"

என பதிவுச் செய்துள்ளார் (Jayakanthan, Balasubramaniyam, 2009). நமது முன்னோர்கள் காட்டிய ஒழுக்கம், நடை, கொள்கை போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் தமிழினம் பார்போற்றும் இனமாக மாறும் என்கிறார் பாரதியார்.

## பாரதியின் தேசியணர்வு

தமிழை தாய்மொழியாக கொண்டவர்களை தமிழர்கள் என்றும், அத்தமிழர்கள் வசிக்கும் ஊரை தமிழ்நாடு என்று அடையாளப்படுத்தும் ஒரே வழக்கம் தமிழர்களுக்கு மட்டுமே உரியது. அவ்வகையில் பாரதியார் மொழி, மொழி பேசும் மக்கள், மக்கள் வசிக்கும் நாடு இம்மூன்றையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி தம் படைப்புகளில் பாடியுள்ளார் பாரதியார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே- இன்பத்

தேன் வந்து பாயுது காதினிலே- எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே"

அனைவரும் தங்களுடைய நாட்டை தாய்நாடு என்று குறிப்பிடுவர் (Bharathiyar, 2007). ஆனால் பாரதியார் முதல் முறையாக தந்தையர் நாடு என்று தமிழ்நாட்டை குறிப்பிடுகின்றார். இதுமட்டுமின்றி தமிழர்களின் வீரம் காதல் வேதம் போன்றவற்றையும் காவிரி தென்பெண்ணை பாலாறு வைகை பொருணை முதலிய ஆறுகள் நிறைந்த தமிழ்நாட்டையும் தமது கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய சொல்லாடல்கள் மூலம் தமிழ்நாடு அனைத்து வளங்களும் தன்னிறைவு பெற்ற நாடாக திகழ்வதைப் பதிவுசெய்துள்ளார் மேலும் வடவேங்கடம் முதல் தென்குமரி வரை பரவியுள்ள தமிழ்நாடு புவி மீது உள்ள அனைத்து செல்வங்களையும் கொண்டது என்கின்றார்.

"பல்விதமாயின சாத்திரத்தின் - மணம்

பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு"

கல்வி கேள்விகளில் சிறந்த நாடு கம்பன், வள்ளுவன் தந்த நாடு, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த நாடு, சீனம் யவன நாடுகளுடன் வாணிபத்தில் சிறப்புற்ற நாடு எங்கள் தமிழ்நாடு என்று பெருமிதமடைகிறார் (Bharathiyar, 2007). இதன்மூலம் தமிழ்நாடு உலக அரங்கிற்கு நடத்தப்படுவதையும் பார்க்கின்றோம். மேலும் பல்துறைகளில் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதையும் உலகிற்கு அறிவிப்பது மட்டுமில்லாமல் தமிழர்களிடையே தமிழின உணர்வு குறித்த விழிப்புணர்வையும் தமது படைப்புகளில் விதைத்துள்ளார்.

அடிமைப்பட்டு இருக்கும் மக்களை நோக்கி

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்தநிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்"

"கஞ்சி குடிப்பதற் கிலார் -அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்"

உண்ணும் உணவு கிடைக்காததற்கான காரணங்களையும் தெரிந்து கொள்ளாமல் அறிவற்றவர்களாக தமிழர்கள் வாழ்கின்றனர் என சாடுகின்றார் (Bharathiyar, 2007). தமிழர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி இருப்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் அதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நம்மை அடிமைகளாக்கியுள்ளார் என்கிறார் பபாரதியாா. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு- நம்மில். ஒற்றுமை நீங்கில்அனைவர்க்கும்தாழ்வே" என்கின்றார் (Bharathiyar, 2007). நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்தால் மட்டுமே நமக்கான சுதந்திரத்தை அடைய முடியும் என்பதே பாரதியார் தம் படைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வர்ண சாதி அமைப்பின் கீழ் கட்டுண்ட மக்களின் விடுதலையை நோக்கி பாரதியார் குறிப்பிடும்போது, பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை என்றும் பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே வெள்ளைப் பரங்கி துரை என்ற காலமும் போச்சே என்று ஜாதி விடுதலைக்கு குரல் கொடுத்தவர் (Bharathiyar, 2007). அவள் கண்ட தேசியம் சுயநலத்தை கைவிட்டு பொதுவுடமை சார்ந்த தேசியத்திற்கு வழிகோலியது 30 கோடி மக்களின் முழுமைக்கும் பொது உடைமை என்றும், தனிமனித உணவு என்று வரும்போது எல்லோருக்கும் பொதுவில் வைப்போம் என்று பொதுவுடமை கருத்தையும் முன் வைத்தவர் தனி மனிதனின் தேவை நிறைவேற்றப்படுவது சிறந்த தேசிய உருவாக்கத்திற்கு அடித்தளமாக அமையும். இன்றைய காலகட்டத்தில் நம் நாடு சந்திக்கின்ற சமுத்திர திட்டம், சிங்களத் தீவிற்கு பாலம் போன்ற உலகளாவிய ஒற்றுமை குறித்த முற்போக்கு சிந்தனையும் தனது கவிதையில் முன்மொழிந்துள்ளார் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் பாரத தேசம் என பாரதியார் தன் கண் தேசியம் வாணிபத்திலும் சிறப்புற்று அமைவதை காலம் வானமே ஒரு நாட்டின் உயிர்நாடி அந்த வாணிபம் சிறப்புற்று விளங்குவது கங்கை நதி புறத்து கோதுமை பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம் (பாரத தேசம்) எனம் பண்டமாற்று வாணிபம் மூலம் அன்னிய தேசங்கள் உடன் தொடர்புக்கு நாடு ஒற்றுமை பாதையில் செல்ல வேண்டும் என்கின்றார் நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னே ஆடுவோமே பள்ளு பாடுவோமே என கவிபாடி பெற்றவர் பாரதியார் முன்பே அறிந்த தீர்க்கதரிசி என்றால் அதில் ஐயமில்லை பாரதியார் கண்ட தேசியம் அடிமைத்தனம் ஜாதி பொருளாதாரம் போன்றவற்றில் இருந்து விடுதலை அடைந்து நாடு பொது உடைமை பாதையில் செல்ல வேண்டும் என கனவு கண்டவர் கனவு இன்று நிறை வெளிவந்து கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிடலாம். தேசியம் என்ற கருத்தை மட்டும் கொண்டதல்ல தேசியம் என்பது ஒரு முழுமை என்றால் அதற்கு காரணமாக முடியும் தேசியம் தேசியம்.

## பாரதியின் பெண்னின உணர்வு

மக்களின் தேச விடுதலைக்கு மட்டும் தன் கவிதைகளை வித்திட்டவர் அல்லர் பாரதி. நாட்டில் உள்ள நங்கையரும் விடுதலை பெற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றே தம் படைப்புகளைப் படைத்துள்ளார். பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால் பின் இந்த உலகினிலே வாழ்க்கை யில்லை என்று பெண்ணின் உயர்வு பற்றியும், பெண்களின் தலையாய தொழில் சமையலும், குழந்தை பெறுதலும் என்ற சமூக கடமையைத் தகர்த்தெறிந்து பாஞ்சாலி சபதம் மூலம் சட்டவிதி பேசும் பெண்ணாக பாஞ்சாலியைப் படைத்துள்ளார். பெண்கள் ஞான சூனியம் எனும் அநியாயத்தை அகற்றி, "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன் மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவை கெடுத்தர்" என்று விளக்கமளித்துள்ளார் தம் படைப்பில் பெண்ணுக்கு அறிவதற்கு என்னும் பேதமை ஒதுக்கி பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை அற்றிடும் காணீர் எனக் கூறி பெருமை படைத்துள்ளார் பெண்களை இவ்வாறு பெண்களுக்கு பெருமை சேர்த்த பாரதி பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என பெண்டிரை பேச வைத்த முதல் மனிதர் பாரதி என்றே கூறவேண்டும் புதுமைப் பெண் எனும் தலைப்பில் கவிதை பெண்ணை தன் கனவு பெண்ணாக படைத்தவர். பெண்மையை உயர்வு செய்த பாரதி பெண் பிறப்பு உயர் பிறப்பு என காட்டும் வகையில் மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் என அழுத்தமாக உரைத்துள்ளார் துன்பம் தீர்வது பெண்மை இல்லடா உயிரினும் இந்தப் பெண்மை இனி தடா என பெண்மையை பெண்மையை சிறப்புற சுட்டியுள்ளார் தம்

படைப்புகளில் நாணமும் அச்சமும் நாய்களுக்கு தான் வேண்டும் நான் நல்லறம் வீர சுதந்திரம் பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம் என பெண்ணுக்கு நாணமும் அச்சமும் மட்டுமே அணிகலன் என்று கூறிய நிலையை மாற்றி வீரம் ஞானம் என்பது பெண்ணுக்கு உரியன என்பது பாரதியார் ஆணித்தரமாக தன் படைப்புகளில் படைத்துள்ளார் பெண் கல்விக்காக குரல் கொடுத்த சீர்திருத்தவாதிகளில் தலையானவர் பாரதியார். இவர் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகையில் ராஜாங்க சுதந்திரங்கள் விதிகளுக்கு முக்கியமானவை அல்ல அநாகரீக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக் கொள்வதே அவர்களுக்கு இப்போது முக்கியமாக வேண்டியது இந்த விஷயம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு மூன்று விதமான உபாயங்கள் இருக்கின்றன.

“முதலாவது உபாயம் கல்வி இரண்டாவது உபாயம் கல்வி மூன்றாவது உபாயமும் கல்வியே” கல்வியைத் தவிர வேறு எந்தவிதமான உபயமும் பெண்களை உயர்த்தாது என்று பெண் கல்வி பற்றி தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் (Bharathiyar, 2007). ஆங்கிலக் கட்டுரைகளிலும் பாரதி பெண்களுக்கு அளிக்கும் கல்வி அவர்கள் நீதிக்கதைகள் படிப்பதற்குரிய அளவிலேயே பயன்படுகிறது என்றக்கூற்றைக் கண்டித்து எழுதியுள்ளார் (Poompuhar Brothers, 1988). பாஞ்சாலி சபதம் வாயிலாக பெண்களுக்கு உரிய நீதியை, சட்டங்களை எடுத்துரைக்கும் பெண்ணாக பாஞ்சாலியைப் படைத்துள்ளார். பாஞ்சாலியைத் தருமன் பனையம் வைத்ததை எடுத்துக்காட்டுகையில்

“செருப்புக்குத் தோல்வேண்டி யே-இங்குக் கொல்வரோ

செல்வக் குழந்தையினை?

விருப்புற்ற சூதினுக் கே - ஒத்த பந்தயம்

மெய்த்தவப் பாஞ்சாலியோ?”

என்று பாரதியார் கேள்வி கேட்கின்றார் (Bharathiyar, 2007). பாஞ்சாலியை அழைக்க வந்த தேர்ப்பாகனிடம் பாஞ்சாலி “என்னை முதல்வைத் திழந்தபின்பு தன்னைஎன் மன்னர் இழந்தாரா? மாறித் தமைத்தோற்ற பின்னரெனைத் தோற்றாரா?” என்று கேள்வி கேட்டு சட்ட விதியைப் பேசும் முதல் பெண்மணியாக பாஞ்சாலியைப் படைத்துள்ளார் பாரதியார். அரசியல் விடுதலை, பெண் விடுதலை, சமத்துவம் விடுதலை ஆகிய அனைத்துக் கோட்பாடுகளையும் வெளிப்படுத்தக்கூடிய காப்பியமாக பாஞ்சாலி சபதத்தை எழுதியுள்ளார் (Bharathiyar, 2007; Kalpana, 2020). இன்று பெண்கள் முழு சுதந்திரத்துடன் படிப்பிலும், பதவியிலும், குடும்பத்திலும் வலம் வர பாரதியின் படைப்பும் பங்களிப்பு காரணமாக அமைகின்றன.

## முடிவுரை

பாரதியார் பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய். வாழ்ந்ததோடு தமிழ், தமிழன், தேசியம், பெண்கள் என்ற அனைத்தையும் ஒன்றாகப் பார்க்கும் பார்வை கொண்டிருந்தார் இன்று தமிழ்நாடு பல துறையிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதை உலகிற்கு அறிவித்ததோடு தமிழர்களுக்கு இடையேயான தமிழ் இன உணர்வு குறித்த விழிப்புணர்வையும் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். பாஞ்சாலி சபதத்தின் மூலம் தங்களின் சட்டவிதிகளை தாங்களே பேசும் முதல் பெண்ணாக பாஞ்சாலியை படைத்துள்ளார். தமிழ் இலக்கிய உலகில் கவிஞராக மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், சமூக சீர்திருத்த வாதியாகவும், சுதந்திரப் போராட்டம் வீரராகவும் தமிழ் மக்கள் உள்ளத்தில் இன்றும் நிலைத்து நின்று வாழும் மாமனிதராக வாழ்ந்தவர் பாரதியார்.

## References

Bharathiyar, (2007) Bharathiar Kavithagal, Kumaran Kumaran Pathippagam, Chennai, India.

Datchinamoorthy, A., (1994) Tamil Nagarikamum Panpaadum, Yaazhl Veliyedu, Chennai, India.

Jayakanthan, Balasubramaniyam, (2009) Mahakavi Bharathiyarin Katturaikal, Sakithya Academy, New Delhi, India.

Kalpana, B., (2020) Bharathi's Concept of Women Liberation: Legacy and Novelty, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India. https://doi.org/10.34256/tak20201

Kandhaiyaa, N.S., (1983) Ulaga Nagarigathin Tamilar, New Century Book House, Chennai, India.

Mani, P.S., (2001) Bharathiar Aaivu Katturaikal, Poonkodi Pathippagam, Chennai, India.

Poompuhar Brothers, (1988) Mahakavi Bharathiyarin Katturaikal, Poompuhar Pathippagam, Chennai, India.

Rathinam, K.P., (1978) Eela Nadum Tamirelamum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License